பகுதியை முன்னேற்றுவதற்கு அங்கே மீன் எண்ணெய் தயாரிக்கின்ற ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தினால் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள், படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். மீண்டும் அவர்களுடைய குடும்பத்திற்கு எதிர்காலத்தில் அவர்களுக்கு ஒரு வாழ்வு கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாக மீண்டும் வலியுறுத்தி அமைகின்றேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணெய்ச் சத்து அதிகமாக உள்ள சுறா மீன், சால மீன் போன்ற மீன்கள் உள்நாட்டு நீர்நிலைகளில் வளர்க்க இயலாது. கடற்பகுதியிலேதான் அதுபோன்ற மீன்கள் எல்லாம் வளரும். எனவே மீன் எண்ணெய் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 68, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

68—

மீனவர் பயிற்சிப் பள்ளி

***60119—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பழையார் மீன்பிடித் துறைமுகம் மற்றும் சீர்காழி தொகுதி ஆகிய இடங்களில் மீனவர் பயிற்சிப் பள்ளி தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பழையார் மீன்பிடித் துறைமுகம் மற்றும் சீர்காழி தொகுதியில் மீனவர் பயிற்சி நிலையம் தொடங்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2005 செப்டம்பர் 27]

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் தங்கத் தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழி தொகுதியில் 14 மீனவ கிராமங்கள் உள்ளன. இதில் பழையார் மீன்பிடித் துறைமுகமும் உள்ளது. மேலும் கொடியம்பாளையம் தீவு என்ற பெரிய மீனவர் கிராமமும் உள்ளது. இக்கிராமங்களில் சுமார் 25 ஆயிரம் மீனவர்கள் மீன்பிடித் தொழிலையே நம்பி வாழ்ந்து வருகின்றனர். நாகப்பட்டினம் மாவட்டத்தில் சுனாமியால் மீனவர்கள் பாதிக்கப்பட்டு அனைத்து உற்றார், உறவினர்கள் மற்றும் உடமைகளையும் இழந்துவிட்ட நிலையில் மாண்புமிகு அம்மா அவர்களின் கருணையால் சுனாமி வந்த சுவடே தெரியாமல் இன்று புது வாழ்வு பெற்றுள்ளார்கள். பழையார் துறைமுகத்திலிருந்தும் மற்றும் 13 மீனவ கிராமங்களிருந்தும் கட்டு மரங்கள் மற்றும் விசைப் படகுகளில் சென்று மீன் பிடிக்கும் மீனவர்கள் குறிப்பாக இளைஞர்கள் சரியான மீன்பிடிப் பயிற்சி இல்லாமல் பெரிதும் சிரமத்திற்கு ஆளாகிறார்கள். இதனைப் போக்கிடவும் நவீன முறையில் மீன்பிடித் தொழில் செய்திடவும் விசைப் படகுகளைப் பழுதுபார்க்கும் பணியைக் கற்றுக்கொள்ளவும் பழையார் மீன்பிடித் துறைமுகத்தில் மீனவர் பயிற்சி நிலையம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தற்போது நாகப்பட்டினம், தூத்துக்குடி, மண்டபம் மற்றும் குளச்சல் ஆகிய 4 இடங்களில் மீனவர் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. பழையார் மீன்பிடித் துறைமுகம் மற்றும் சீர்காழி போன்ற இடங்கள் எல்லாம் நாகப்பட்டினம் பகுதியிலேதான் இருக்கின்றன. எனவே அந்தப் பகுதியிலே பயிற்சி பெறுகின்ற அந்த மீனவ இளைஞர்களுடைய எண்ணிக்கை குறைவாக இருப்பதால் அந்தப் பகுதியிலே, நாகப்பட்டினம் பகுதியிலே அவர்களும் பயிற்சி பெறலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நா. சந்திரமோகன்.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழியிலிருந்து நாகப்பட்டினம் தலைநகரத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் 60 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டிய

சூழ்நிலை இருக்கிறது. மேலும் நாகப்பட்டினம் மாவட்டத்திலேயே பழையாரில்தான் மீன்பிடித் துறைமுகம் உள்ளது. அதனால் நாகப்பட்டினத்திலே இருக்கக்கூடிய மீனவர் பயிற்சிப் பள்ளியை சீர்காழியிலுள்ள பழையார் மீன்பிடித் துறைமுகத்திற்கு மாற்றிக் கொடுக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதிக்கு மீனவர் பயிற்சி நிலையம் வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்குக் கொண்டு சென்று அதுசம்பந்தமாக ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 69, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

69—

சுற்றுலா மேம்பாடு

*** 48228—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குருசடைத் தீவில் சுற்றுச்சூழல் மாசுபடாமல் சுற்றுலாவை மேம்படுத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14–11–2003 முதல் குருசடைத் தீவில் சுற்றுச்சூழல் மாசுபடாமல் சுற்றுலாவை மேம்படுத்த கண்ணாடி இழை அடித்தளப் படகுகள் வாங்கப்பட்டு அவை பயன்பாட்டில் உள்ளன.

திரு. கே. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயிரியல் பாடப் பிரிவிலே பல்வேறு ஆராய்ச்சி மாணவர்கள் தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும் அந்தப் பகுதியிலே ஆய்வு செய்கின்ற ஒரு தீவாக இருந்து கொண்டிருக்கிறது. சுற்றுலாப் பயணிகள் நலன் கருதி இப்போது புதிய படகுகள் விட்டிருப்பதாக நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே பவளப் பாறை